Annex

அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை: 05/2015

எனது இல. EST 5/1/49
அரசாங்க நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி
மற்றும் சனநாயக ஆட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.

2015.02.11

அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்
மாகாண பிரதம செயலாளர்களுக்கும்
திணைக்களத் தலைவர்களுக்கும்
அரசாங்க கூட்டுத்தாபனங்களினதும், நியதிச்சட்ட சபைகளினதும்,
முழுமையாக அரசாங்கத்துக்குரித்தான கம்பனிகளது தலைவர்களுக்கும்

**2015 வரவு செலவுத்திட்ட பிரேரணைக்கமைய அரசாங்க துறையின் அலுவலர்களுக்கும்**
**<u>ஓய்வூதியர்களுக்குமான கொடுப்பனவில் திருத்தம் மேற்கொள்ளல்</u>**

"2015 வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளின் அடிப்படையில் அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான இடைக்காலக் கொடுப்பனவுகளை வழங்குதல்" எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட மேற்படி 2014.11.12 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 24/2014 மற்றும் 2014.12.31 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 24/2014 (I) தொடர்பாக தங்களது அவதானத்துக்கு உட்படுத்துகின்றேன்.

**02.** அச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய அரசாங்க துறையில் சேவையாற்றுகின்ற அலுவலர்களுக்கு தற்போது வழங்கப்படுகின்ற ரூபா 3000/- ஆன மாதாந்த இடைக்கால கொடுப்பனவுக்கு மேலதிகமாக 2015 பெப்ரவரி மாதத்தில் இருந்து அமுல்படுத்தப்படுமாறு மேலதிகமாக ரூபா 5000/- கொடுப்பனவாக வழங்கப்பட வேண்டும். அரசாங்க துறையின் அலுவலர்களுக்கு வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்ட மாதாந்த ரூபா 10000/- கொடுப்பனவிலிருந்து செலுத்த வேண்டிய எஞ்சிய தொகையான ரூபா 2000/- ஐ 2015 ஜுன் மாதத்தில் இருந்து வழங்குவதற்கு நடவடிக்கையெடுக்கப்படல் வேண்டும்.

**03.** மேற்படி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய ஓய்வூதியர்களுக்கு தற்போது வழங்கப்படுகின்ற ரூபா 2500/- ஆன மாதாந்த இடைக்கால கொடுப்பனவுக்கு மேலதிகமாக 2015 ஏப்ரல் மாதத்தில் இருந்து அமுல்படுத்தப்படுமாறு மேலதிகமாக ரூபா 1000/- கொடுப்பனவாக வழங்கப்பட வேண்டும்.

**04.** இச் சுற்றறிக்கை பொதுத்திறைசேரியின் இணக்கப்பாட்டுடன் வெளியிடப்படுகின்றது

ஒப்பம்/ ஜே. தடல்லகே
செயலாளர்
அரசாங்க நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி
மற்றும் சனநாயக ஆட்சி அமைச்சு